மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய கேள்வியில் கொடுத்துள்ள எரிபோடு எஸ். புதூர், மீனாட்சிபுரம், பாண்டியன் நகர், குண்டம் பட்டி, சின்னக்குட்டியப்பட்டி, குறும்பட்டி, புதும்விளையான் பட்டி, ஏறாதசமுத்திரம், கங்கைநேரம், மணியன்காரன்பட்டி, பண்ணைப்பட்டி, உத்தமன்பட்டி, எம். புதூர், மாவாம்பட்டி ஆகிய எல்லா இடங்களிலும் குடிநீர் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து கொண்டு வருகிறது. ஆங்காங்கே சில இடங்களில் எல்லாம்—சில கிராமங்களில் தண்ணீர் வறண்டு போய் இருக்கிறது. வறண்டுபோய் இருக்கிற கிராம மக்கள் பக்கத்தில் உள்ள கிராமங்களிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொள்கிறார்கள். அந்தச் சூழ்நிலைதான் அங்கே நிலவுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை.

186—(*வினா எண் 8153) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, ஆலங்குடியில் வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர் அமரர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் ஆலங்குடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் இருந்து அடுத்து 1978-ல் நான் அந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த நேரத்திலும் சரி தொடர்ந்து இப்போதும் அந்த ஆலங்குடியில் ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி வந்து கொண்டு இருக்கிறோம். ஆலங்குடி

1987 மார்ச் 26]

பகுதியில் நிலக்கடலை அதிகமாக பயிரிடப்படுகிறது. அதோடு மட்டும் அல்லாமல் ஆலங்குடி நகரத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட கடலை எண்ணை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே இதை கருத்தில் கொண்டு அரசு மறு பரிசீலனை செய்து மிகவும் பின் தங்கிய மாவட்டம் ஆகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் வேறு எந்த தொழிற்சாலையும் இல்லாத காரணத்தால் இந்த வனஸ்பதி தொழிற்சாலையை ஆலங்குடியில் அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் 31 ஆயிரத்து 311 ஹெக்டேரில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. ஆக அந்தப் பகுதியில் இந்த வனஸ்பதி ஆலை நிறுவுவதற்கு நல்ல சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. ஆனால் நாட்டில் உற்பத்தி ஆகின்ற வனஸ்பதியில் 25 சதவீதம் தான் நாட்டில் விற்பனை ஆகிறது. இரண்டாவது, சமையலுக்குப் பயன்படாத எண்ணெயில் இருந்து தான் வனஸ்பதியை செய்ய வேண்டும் என்று மத்திய பேரரசு உரிமம் வழங்குவதில் தடை விதித்து இருக்கிறது. அந்தத் தடை நீக்கப்பட்டால் வனஸ்பதிக்கான ஆலைகளுக்கான உரிமங்களை மத்திய பேரரசு தந்தால் இதைப் பற்றி பரிசீலிக்கலாம்.

கிராமங்களில் பயிற்சி வழித் தொடர்பு திட்டம்.

187—(* வினா எண் 9653) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் பயிற்சி வழித் தொடர்பு திட்டம் சரிவர நடைபெற்று வருகிறதா?

(ஆ) இல்லையெனில், அதன் குறைபாடுகளைப் போக்கி விவசாயிகள் பலன் பெறத்தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.